# பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

***கிழமை இல. 49 - 2023***

## கல்வி – 09.12.2023 சனிக்கிழமை - 09:30 -12:30

**அரையாண்டுத் தேர்வு 2023 இற்கான எழுத்துத் தேர்வு 09.12.2023 நடைபெறும்.**
அனைத்துப் பெற்றோரும் ஆசிரியர்கள் தரும் தகவல்களுக்கு ஏற்றவாறு பிள்ளைகளைத் தயார்படுத்தவும்.
**எழுத்து தேர்வு நடைபெற இருப்பதால் இடைவேளையின் போது மாணவர்கள் வெளியில் செல்ல அனுமதியில்லை. மாறாக உங்கள் பிள்ளைகளுக்கான சிற்றுண்டி உணவுகளை உங்கள் வகுப்பு பிரதிநிதிகள் ஊடாக கொடுத்தால் அவர்கள் உரிய மாணவர்களிடம் கொண்டு சேர்ப்பார்கள்.**

**கலைவகுப்புகள் - 09.12.2023 சனிக்கிழமை** - வழமைபோல் நடைபெறும். மாற்றங்கள் இருப்பின் கலை ஆசிரியர்கள் தங்களுக்கு நேரடியாக அறிவிப்பார்கள்.

## நத்தார் விழா 2023

அழைப்பிதழ் மற்றும் நிகழச்சிநிரல்கள்
நத்தார் விழாவிற்கான பயிற்சிகள் ஆசிரியர்களால் வழங்கப்படுகின்றது. அவர்களுக்கு சிறந்த ஒத்துழைப்பினை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
நத்தார் விழா 16.12.2023 - இதற்குப் பொறுப்பானவர்கள் 1ஆம், 5ஆம் மற்றும் 6ஆம் வகுப்புப் பெற்றோர்கள். இவர்களுக்கான தகவல்கள் விரைவில் வகுப்புப் பிரதிநிதிகளினூடாக வழங்கப்படும்.

## மாவீரர் நினைவாக நடத்தப்பட்ட ஓவியப்போட்டி 2023 முடிவுகள்

தேசிய மட்டத்திலான மாவீரர் நினைவாக நடத்தப்பட்ட ஓவியப்போட்டி 2023 இல் பங்கு பற்றிய அனைவருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். எமது வளாகத்திலிருந்து பங்குபற்றி வெற்றிபெற்றவர்களான
7ஆம் வகுப்பு மாணவி
**செல்வி. பிரீத்திகா பிரதீஷ்குமார் (1ஆம் இடம்)**
மற்றும்
10ஆம் வகுப்பு மாணவி
**செல்வி. அஞ்சனா பரணீதரன் (2ஆம் இடம்)**
ஆகியோருக்கும் எமது சிறப்பு வாழ்த்துகளையும் பெருமையோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

## நிர்வாகத் தெரிவுக்குழு 2024

நிர்வாகத் தெரிவுக்குழுவினர் பெயர், தொடர்பு தொலைபேசி எண்கள் மற்றும் மின்னஞ்சல் விபரம்:

1.பாணுசல்யா பெனார்ண்டோ (பெற்றோர்) (Banusalya Fernando)
banusalya@yahoo.com
தொலைபேசி: 41931302

2.ஜொய்சி செலினா இராசகுமார் (பெற்றோர்) (Joicy Selina Rajakumar)
dr.joicy@outlook.com
தொலைபேசி: 46466205

3.பரகீத்தா ஜீவா (ஆசிரியர்) Prakeetha Jeeva
prakeetha@hotmail.no
தொலைபேசி: 95185209

அடுத்த நிர்வாகத்தில் இணைந்து பணியாற்ற விருப்பமுள்ளவர்கள் 31.12.2023 இற்கு முன் விண்ணப்பித்தல் வேண்டும்.

## அன்னை தமிழ்முற்றப் போட்டிகள் 2024

மாணவர்களுக்கான போட்டிகள் தொடர்பான விவரங்கள் வருமாறு:

- சிறுவர் பிரிவு – கதை சொல்லும் போட்டி (2018 பிறந்தோர்).
- ஆண்டு 1 முதல் 7 வரையான மாணவர்களுக்கான பேச்சுக்கள் ஆண்/பெண் இருபாலாருக்கும் இடம்பெறும்.
- ஆண்டு 4 முதல் 10 வரையான மாணவர்களுக்கான திருக்குறள் ஒப்பித்தல் ஆண்/பெண் இருபாலாருக்கும் இடம்பெறும்.

அன்னை தமிழ்முற்றப் போட்டிக்கான முழு விபரங்கள் அனைத்து வகுப்பு வைபர் குழுமங்களிலும் அனுப்பப்பட்டுள்ளது.
இணைப்பை பார்க்கவும்.

**தேநீர்ச்சாலை -** இயங்குநிலையில் இருக்கும்.

***பெற்றோர் மற்றும் பாதுகாவலரின் முக்கிய கவனத்திற்கு!***

தாங்கள் தாங்கள் பயன்படுத்திய உணவுப்பொருட்கள் மற்றும் தேநீர்க் குவளைகள் அனைத்தையும் குப்பையிலிட்டு இடங்களைச் சுத்திகரித்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## தைப்பொங்கல் விழா 2024 (13.01.2024)

அன்னை பூபதி தமிழ்க் கல்விக்கூடங்கள் மற்றும் தமிழர் வள ஆலோசனை மையம் இணைந்து நடாத்தும் தைப்பொங்கல் விழா.

## நிதி 2023

**Høst 2023 இற்குரிய கட்டணவிபரணங்கள் அனுப்பப்பட்டுள்ளது. கவனத்திற்கொண்டு வழங்கப்பட்டுள்ள முடிவுத் திகதிக்குள் /விரைவாகச் செலுத்தினால் நன்று.**

**நிலுவையிலுள்ள பழைய høst 2022, vår 2023 கட்டணங்களை விரைவாகச் செலுத்தவும்.**
**செலுத்தியவர்கள் இத்தகவலை விலத்திச்செல்லவும்.**

கட்டண அறவீட்டுத் தகவல் இன்னும் கிடைக்காதவர்கள் நிதிப்பொறுப்பாளருடன் தொடர்புகொள்ளவும்.

அன்னையினால் தனிப்பட்ட முறையில் அனுப்பப்பட்ட அங்கத்துவக் கட்டணத்தினை சிலர் இன்னும் செலுத்தவில்லை என்ற தகவல் கிடைத்துள்ளது. எனவே இதுவரை செலுத்தாமல் இருந்தால் அதனை விரைவில் செலுத்தும்படி வேண்டிக்கொள்கின்றோம். அக்கட்டணத்தினையும் செலுத்தியவர்கள் மட்டுமே முழுமையான உறுப்பினர் உரிமையைப் பெற்றவர்களாவர் என்பதனை அறியத்தருகின்றோம்.
ஐயப்பாடுகள் இருப்பின் நிதிப்பொறுப்பாளருடன் மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளவும்.
jude@annai.no

### முக்கிய கவனம்!!

1. *மாணவர்கள் வெளியில் பயன்படுத்தும் காலணிகளைக் கழற்றி கட்டிடத்தினுள் பயன்படுத்தக்கூடிய காலணிகளையும் கொண்டுவருதல் மிக முக்கியம்.*
2. *கற்பித்தல் நேரங்களில் கீழ்க்கட்டிடத்தினுள் எந்தப் பெற்றோரும் காத்திருப்பதற்கு ஒப்புதல் இல்லை.*
3. *பாடசாலையில் தீப்பிடித்ததற்கான அறிகுறியை அறிவிக்கும் அபாயமணி ஒலிக்கும்பட்சத்தில்* ***(brannalarm)****, அனைவரும் கட் டிடங்களிலிருந்து தாமதமெதுவுமின்றி வெளியேறவேண்டும். அனைவரும் அவசர வாகனப் போக்குவரத்துக்கு இடையூறின்றி* ***(brannbil, ambulanse osv)*** *வாகனத்தரிப்பிடத்திலுள்ள கொடிக்கம்பத்தினருகே ஒன்றுகூடவேண்டும். வகுப்பிலுள்ள மாணவர்களை வெளியே கூட்டிவருவது ஆசிரியர்களின் பொறுப்பாகும். பெற்றோர்கள் வகுப்பறை நோக்கிச் செல்வதற்கு அனுமதியில்லை. எப்பொழுதும் வாகனங்களை அவசர வாகனப் போக்குவரத்துக்கு இடையூறின்றி* ***(brannbil,politibil, ambulanse osv)*** *நிற்பாட்டுதல் அவசியமென்பதை நினைவிற்கொள்க!*

***எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.***

நன்றி!

நிர்வாகம்
அன்னை பூபதி லோறன்ஸ்கூக் வளாகம்

தமிழை வளர்க்கப் பணிபுரிவோம்!